DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, RAMANATHAPURAM

**CC.No. 25/2023**

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 07th day of June 2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | **PW – 1** | கிராமம் | : | கொடிக்குளம் |
| பெயர் | : | கலா | தாலுகா | : | கீழக்கரை |
| க/ பெ. | : | கனகராஜ் | சமயம் | : | இந்து |
| வயது | : | 35 | ஜாதி | : | தேவேந்திரகுல வேளாளர் |
| தொழில் | : | கல்லூரியில் உடற்கல்வி ஆசிரியர் | | | |

<u>நாள்: 07.06.2024</u>
<u>நேரம்:03.05</u>

1, 3 எதிரிகள் ஆஜர். 2ம் எதிரி ஆஜர் இல்லை. அவரது தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சியிடம் சத்தியபிரமாண வாக்குமூலம் பெறப்பட்டது.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் மேற்படி முகவரியில் வசித்து கீழக்கரை தனியார் கல்லூரியில் உடற்கல்வி ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். எதிரிகளை தெரியும். எனது ஊரை சேர்ந்தவர்கள். எங்களுக்கும், எதிரிகளுக்கும் இடம் சம்மந்தமாக பிரச்சனை உள்ளது. 15.05.2021 மாலை 5.30 மணியளவில் எங்கள் இடத்தில் வந்து மங்களேஸ்வரன் என்பவர் உழுது கொண்டிருந்தார். அப்போது நானும், எனது அம்மாவும் வரப்பில் நின்று கொண்டிருந்தோம். அப்போது 1ம் எதிரி காளிமுத்து என்பவர் எனது அம்மாவை கன்னத்தில் அறைந்து கீழே தள்ளிவிட்டு ஏன் என்னுடைய இடத்தில் உழுது கொண்டிருக்கிறாய் என்று கேட்டார். நான் எங்கள் இடத்தில் உழுது கொண்டிருக்கிறோம் என்று சொன்னோம். அப்போது எங்கள் இடத்தில் உழுகக் கூடாது என்று 1ம் எதிரி எங்களிடம் சொன்னார். 2ம் எதிரி ரெத்தினவள்ளி என்னை தவறான வார்த்தைகளால் என்னை அசிங்கமாக பேசி என் இடத்தில் உழுகக்கூடாது என்று சொன்னார். 3ம் எதிரி எங்களை அசிங்கமாக பேசினார். அதன் பின்னர் நாங்கள் காவல் நிலையத்தில் சென்று

புகார் கொடுத்தோம். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார்தான் அது. **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆகும்**. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். காயம் இல்லாததால் மருத்துவமனை செல்லவில்லை.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

அந்த இடத்தை யாரிடமிருந்து நான் கிரையம் பெற்றேன் வைரமுத்து, ராக்கன் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றேன். மேற்படி இடமானது வைரமுத்து, ராக்கன் அவர்களின் தந்தை சின்னவெள்ளையனின் சொத்து என்றால் சரிதான். சின்னவெள்ளையனுக்கு காளிமுத்து, வைரமுத்து, ராக்கன், ராமேஸ்வரி ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். அந்த இடத்தை பாகப்பிரிவினை செய்யவில்லை என்றால் சரியல்ல, செய்தார்கள். அந்த இடத்தையும் சேர்த்து 1ம் எதிரியிடம் கையொப்பம் வாங்காமல் 2 பேரிடம் மட்டும் கையெழுத்து பெற்று இடத்தை கிரையம் பெற்றேன் என்றால் சரியல்ல, நான் கிரையம் பெற்றபோது 1ம் எதிரிக்கு அந்த இடத்தை பாகப்பிரிவினை செய்து கொடுக்கவில்லை. நான் மோசடியாக 1ம் எதிரியின் இடத்தையும் சேர்த்து கிரையம் பெற்றேன் என்றால் சரியல்ல. இந்த இடம் சம்மந்தமாக ஊரில் பஞ்சாயத்து பேசினார்கள் என்றால் பேசினார்கள்.

1ம் எதிரி அந்த இடம் சம்மந்தமாக எனக்கு எதிராக இராமநாதபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஓ.எஸ். 8/2002 ஆக வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். நான் 2001ல் கிரையம் பெற்றுவிட்டேன். அந்த வழக்கின் உத்தரவில் 1ம் எதிரிக்கான பங்கை கொடுக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான், 1ம் எதிரி நான் கிரையம் பெற்ற இடத்தில் இருந்து 2 பங்கை எடுத்துக் கொண்டார். நான் சம்பவ சமயத்தில் நான் கிரையம் பெற்ற இடத்தில் உழுதேன் என்றால் சரிதான். 1ம் எதிரி மேற்படி இடத்தில் உழவு செய்யக்கூடாது என்று சொன்னாரா என்றால் இல்லை, எங்கள் இடத்தில் தான் 1ம் எதிரி உழவு செய்தார், நாங்கள் தான் அவரை உழவு செய்யக்கூடாது என்று சொன்னார். என்னை யார் முதலில் அடித்தது என்றால் எனது அம்மாவை 1ம் எதிரி முதலில் அடித்தார், மற்ற எதிரிகள் எங்கிருந்தார்கள் என்றால் பக்கத்தில் நின்று கொண்டிருந்தார்கள். நான் எங்கு இருந்தேன் என்றால் அங்கு தான் இருந்தேன்.

டிராக்டர் ஓட்டிக்கொண்டிருந்த நபர் எங்கிருந்தார் என்றால் அப்போது அவர் சென்றுவிட்டார். அந்த நபர் சம்பவத்தை பார்த்தாரா என்றால் அது பற்றி எனக்கு சரியாக தெரியாது, உழுது கொண்டிருக்கும்போது தான் பிரச்சனை ஏற்பட்டது, அவர் நகர்ந்துவிட்டார். சம்பவ இடத்திற்கு அருகில் வசித்தவர்கள் சம்பவத்தை பார்த்து விலக்கி விட்டார்களா என்றால் யாரும் விலக்கிவிடவில்லை, அவர்கள் அன்று வீட்டில் இருந்தார்களா என்று தெரியவில்லை. புகார் கொடுத்து 2 நாட்கள் கழித்து தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். எனது கணவர்

உத்திரகோசமங்கை மின்அலுலவகத்தில் உதவி மின்பொறியாளராக உள்ளார் என்றால் சரிதான். என்னை 1ம் எதிரி அடிக்கவில்லை என்றாலும், டிராக்டரை வைத்து இடத்தை உழவு செய்யக்கூடாது என்று சொன்ன பிறகு, டிராக்டர் சென்ற நிலையில் 1ம் எதிரி அடித்ததாகவும், மற்ற எதிரிகள் திட்டியதாகவும் சொல்வது இந்த வழக்கிற்காக சொல்லப்படும் பொய் என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகாரில் உண்மைதன்மை இல்லை என்பதால் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. அதன் பின்பு எனது கணவரின் செல்வாக்கை பயன்படுத்தி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்ற உத்தரவுப்படி 1ம் எதிரிக்கு சேரவேண்டிய சொத்தானது தற்போது யாரிடம் உள்ளது என்றால் 1ம் எதிரி தான் அந்தஇடத்துடன் எனது இடத்தையும் சேர்த்து வைத்துள்ளார்கள். 1ம் எதிரிக்கு நீதிமன்ற உத்தரவு மூலம் கிடைத்த பங்கை நான் 1ம் எதிரிக்கு கொடுக்காமல் அத்துமீறி உழவு செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

E VIRGIN VESTA

Digitally signed by E VIRGIN VESTA
Date: 2024.06.07 17:13:11 +0530

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, RAMANATHAPURAM

**CC.No. 25/2023**

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 07th day of June 2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | **PW – 2** | கிராமம் | : | கொடிக்குளம் |
| பெயர் | : | மங்களம் | தாலுகா | : | கீழக்கரை |
| க/ பெ. | : | ராமைய்யா | சமயம் | : | இந்து |
| வயது | : | 68 | ஜாதி | : | தேவேந்திரகுல வேளாளர் |
| தொழில் | : | விவசாயம் | | | |

நாள்: 07.06.2024
நேரம்:03.30

1, 3 எதிரிகள் ஆஜர். 2ம் எதிரி ஆஜர் இல்லை. அவரது தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சியிடம் சத்தியபிரமாண வாக்குமூலம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை:**

நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். எதிரிகளை தெரியும். அ.சா.1 எனது மகள். 15ம் தேதி 2021ம் வருடம் மாதம் தெரியவில்லை. மாலை 5.15 மணியளவில் நான் வாங்கிய வயலில் மங்களேஸ்வரன் உழுது கொண்டிருந்தார். நானும், எனது மகளும் வரப்பில் நின்று கொண்டிருந்தோம். அப்போது 1 முதல் 3 எதிரிகள் வந்து டிராக்டரை உழுகக்கூடாது என்று நிறுத்தினார்கள். நான் ஏன் உழுகக்கூடாது என்று நிறுத்துகிறீர்கள் என்று கேட்டேன். அப்போது 1ம் எதிரி என்னை பிடித்து தள்ளினார். எனது மகள் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1ம் எதிரி என்னை பிடித்து தள்ளினார் என்றால் சரிதான். 2, 3 எதிரிகள் என்னை பிடித்து தள்ளினார்களா என்றால் தள்ளினார்கள். எதிரிகள் என்னை அசிங்கமாக பேசினார்களா என்றால் பேசினார்கள். சம்பவத்தை வேறு யாராவது

பார்த்தார்களா என்றால் யாரும் பார்க்கவில்லை. 1ம் எதிரி காளிமுத்து என்னை பிடித்து தள்ளியதாக தான் போலிசாரிடம் சொன்னேன் என்றால் சரிதான். எதிரிகள் என்னை அடிக்கவும் இல்லை என்றாலும், பேசவில்லை என்றாலும், 1ம் எதிரி பெயரில் உள்ள இடத்தை நாங்கள் உழுததால் தான் பிரச்சனை ஏற்பட்டு பொய் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல, அந்த இடத்தை நாங்கள் பணம் கொடுத்து வாங்கினோம்.

**மறுவிசாரணை – இல்லை**

E VIRGIN VESTA

Digitally signed by E VIRGIN VESTA
Date: 2024.06.07 17:13:18 +0530